Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 15

திங்கட்கிழமை
11 டிசெம்பர் 2023

கார்த்திகை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"ஆர் என்ன சொன்னாலும் உந்தாள் அதுக்கு மாறாத்தான் முடிவெடுக்கும் கண்டியளோ"



# நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும்!

## சில தரப்புகள் ரணிலுக்கு ஆலோசனை

**கொழும்பு, டிசெம்பர் 11**

**அடுத்த ஆண்டு ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பிலும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.**

☞ 11

ஐ.நா. அலுவலகம் முன்பாக

# ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 11
இளைஞர் உரிமைகள் கூட்டமைப்பால் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம், புதிய ஊடக ஒழுங்குமுறைச் சட்டம் ஆகியனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இனவாதத்தை ஒழித்தல், பலஸ்தீனத்தை விடுவித்தல்

☞ 11

'அஸ்வெசும' நலன்புரித்திட்டம்:

# 2 ஆம் கட்டம் ஜனவரியில்

கொழும்பு, டிசெ. 11
'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் கோரப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

☞ 11

## மின்சக்தி அமைச்சர் பதவி விலகவேண்டும்

### ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 11
மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சன விஜயசேகரவும், அமைச்சின் செயலரும் உடன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் கலாநிதி ஓமல்பே சோபித தேரர்.
'நாடு முழுவதுமான மின் துண்டிப்புகள் இடம்பெறக்கூடும் - உரிய ஏற்பாடுகள் அவசியம் எனப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது. அந்தப் பரிந்துரை குறித்து கவனம் எடுக்கப்படவில்லை. தன்னிச்சையாகச் செயற்படும் அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் அசமந்தப்போக்கு காரணமாகவே மின் தடை ஏற்பட்டுள்ளது. இது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் போன்ற பெரும் அநியாயமாகும். அமைச்சரும், அமைச்சின் செயலரும் பதவி விலக வேண்டும்' - என்றார். (அ-ஒ-44)

உலகத் தமிழர் பேரவைக்கு

## ரெலோ கண்டனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 11
உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை கொச்சைப்படுத்தும் முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - இவ்வாறு ரெலோவின் பேச்சாளர்

☞ 11

## மாவீரர் நினைவேந்தல்; 4 பேரிடம் விசாரணை!

மட்டக்களப்பு, டிசெ. 11
மட்டக்களப்பு, தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தலில் பங்கேற்ற ஊடகவியலாளர் உள்ளிட்ட நால்வர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

☞ 11

## நட்புத் தொடரும்



### விடைபெறும் பாக்லே தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு ஒருபோதும் மாற்றமடையாது என இலங்கைக்கான இந்தியத்

☞ 11

உண்மை நல்லிணக்க ஆணைக்குழு

## இடைக்காலச் செயலகத்தின் கருத்துக்கேட்பு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 11
உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவின், இடைக்காலச் செயலகத்தால் நல்லிணக்கப் பொறிமுறைக்கான கருத்துகளைக் கேட்டறிதல் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் நாளை வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

☞ 11

சுற்றுலா வருமானம்

## அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 11
இலங்கையின் சுற்றுலா வருமானம் இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் 1.8 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. இது 2022ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தைக் காட்டிலும் 78.3 வீத அதிகரிப்பாகும் என இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

பெற்றோல், டீசலுக்கும்

## வற்வரி உண்டு!

கொழும்பு, டிசெ. 11
பெற்றோல் மற்றும் டீசலுக்கு வற்வரி அறவிடப்படும். கச்சா எண்ணெய் வடிவில் கொண்டு வரப்படும் எரிபொருளுக்கு இந்த வரி அறவிடப்படாது - இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டவரைவை நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## எல்லா நாடுகளும் கைவிட்டுவிட்டன

### தங்கள் வியாபாரத்துக்காக அரசாங்கத்துடன் உறவாடுகின்றன என்கிறார் சரவணபவன்



யாழ்ப்பாணம், டிசெ. 11
எந்தவொரு நாடும் தமிழினத்துக்கு உதவத் தயாரில்லை. அனைத்து நாடுகளும் தங்கள் வியாபார நோக்கத்துடன் அரசாங்கத்துடன் சேர்ந்து ஓடுவதற்கு முயல்கின்றன. ஈழத்தமிழினம் தொடர்பான அக்கறை அவர்களுக்கு இல்லை - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்

☞ 11

**பருத்தித்துறைக் கடற்பரப்பில் 25 தமிழக மீனவர்கள் கைது!**

விரிவு - பக்.04



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதியைத் தீர்மானிப்பது பலமான நாடுகளா?



### ஐக்கிய நாடுகள் சபையை சாடும் நாடுகடந்த தமிழீழ அரசு

**கொழும்பு, டிசெ. 11**

**உலகளவில் போர்க்குற்றங்கள், இனவழிப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கையில், உலக நீதியென்பது பலம்வாய்ந்த நாடுளின் நன்மைகளை மையப்படுத்தியதாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ஆண்டுதோறும் டிசெம்பர் 9ஆம் திகதி இனவழிப்புக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நாளாக அமைந்துள்ளது. இந்தக் குற்றத்தைத் தடுக்கும் சர்வதேச தினத்தைக் கருத்திற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியொன்றை வலியுறுத்தும் செயற்பாட்டை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. உலகளாவிய உண்மைகள்மீண்டும் மீண்டும் கசப்பான உண்மையொன்றை வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் முள்ளிவாய்க்காலில் தமிழர்களின் துயரமான இன அழிப்பிலும், 2014இல் ஐ.எஸ். அமைப்பால் யாசிடிக்களின் இன அழிப்பிலும், எத்தியோப்பியாவில் திகரேயர்களின் இனவழிப்பிலும், சீனாவில் உய்குர்களின் இனஅழிப்பிலும், மியான்மரில் ரொஹிங்யர்களின் இன அழிப்பு படுகொலையிலும் இந்த உண்மை வெளிப்படுகின்றது. தற்போது காசாவில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பலஸ்தீனியர்கள் மீதான இன அழிப்பானது இருதயத்தை பிளப்பதாகவும், தீர்க்கமான சர்வதேச நடவடிக்கையின் உடனடித் தேவையை தார்மீக ரீதியில் கோரியதாகவும் அமைந்துள்ளது - என்றுள்ளது. (ம)

## மின்துண்டிப்பு



# விசாரணை தேவை

கொழும்பு, டிசெ.11

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மின்சாரத்துக்காக அதிக பணம் செலவழிக்கும் நாட்டில் பாதுகாப்பின்மைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒரு மின் கடத்தி பழுதடைந்ததன் காரணமாக முழுநாட்டின் மின்சாரக் கட்டமைப்பும் எவ்வாறு தடைப்பட்டது என்பது தொடர்பான பக்கச்சார்பற்ற விசாரணை தேவை. இதனூடாக நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து துல்லியமான பகுப்பாய்வு நடத்தப்பட வேண்டும்- என்றார். (எ-44)

## குற்றங்கள்

## சிறுமி சடலமாக மீட்பு

கொழும்பு, டிசெ. 11

கொலன்னாவ பகுதியில் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை காணாமற்போயிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலன்னாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## நால்வர் கைது

கொழும்பு, டிசெ.11

சாய்ந்தமருது குர்ஆன் மதிராஸாவில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுவனின் ஜனாஸா தொடர்பாக மதராஸாவின் நிர்வாகியான மீரா சாய்வு முஹமட் ஜனாஸ் என்பவர் சாய்ந்தமருது பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், சி.சி.ரி.வி. பொருத்துநர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## சிறுமி துஷ்பிரயோகம்

கொழும்பு, டிசெ.11

மொனறாகலையில் 13 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயின் இரண்டாவது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## பள்ளிவாசல் உண்டியலில் பணம் திருட்டு

கொழும்பு, டிசெ.11

ஹற்றன் ஜும்மா பள்ளிவாசலின் காவலாளியின் தலையில் அடித்துக் கொன்று விட்டு, பள்ளிவாசலில் இருந்து உண்டியலில் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் ஜும்மா பள்ளிவாசலில் சுமார் இரண்டு வருடங்களாகக் காவலாளியாகக் கடமையாற்றிய ஹற்றன் ஹிஜிரபுரப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவரே கொல்லப்பட்டுள்ளார். (எ-இ)

## கடன் மறுசீரமைப்பால் 17பில். டொலர் இலாபம்

கொழும்பு, டிசெ. 11

இலங்கை திட்டமிட்டுள்ள அடிப்படையில் கடன் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டால், சுமார் 17 பில்லியன் டொலர் அளவான நிதி இலாபம் ஏற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இலங்கை குறித்து சர்வதேசம் நம்பிக்கை கொள்ளும். ஏனைய நாடுகளுடனான கடன் மறுசீரமைப்பின்போது, நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைக்கப்போவதில்லை. மாறாக கடன் செலுத்தும் காலத்தை நீடித்து வட்டியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படும்.

இதனை வெற்றிகரமாக நிறைவு செய்தால், இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் டொலர் இலாபம் ஏற்படும்- என்றார். (ம)



## இலங்கை 'ரிலீஸ்'

கொழும்பு, டிசெ. 11

வங்குரோத்து அடைந்த நாடு என்ற நிலையில் இருந்து இலங்கை அடுத்த ஓரிரு நாள்களில் விடுவிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் இரண்டாம் தவணைக்கான அனுமதி எதிர்வரும் ஓரிரு நாள்களில் கிடைக்கவுள்ளது என்றும் தெரிவித்தார். (ம)

## கூட்டணி அமைத்து பொருளாதார வலயம்

கொழும்பு, டிசெ. 11

பொருளாதாரத்தை மேம்படுத்த பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானுடன் இலங்கை கூட்டணிகளை அமைக்கவுள்ளது.

'பொருளாதார வலயம்' என்ற பெயரில் இந்தக் கூட்டணி அமைக்கப்படவுள்ளதுடன், இந்த நாடுகளின் பிரதிநிதிகள் துறைசார் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காக விரைவில் இலங்கைக்கு வரவுள்ளனர். (ம)

## நாடாளுமன்று ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.11

கோரம் இல்லாத காரணத்தால் நாடாளுமன்ற அமர்வு இன்று காலை 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ச நேற்று அறிவித்தார்.

சபை நேற்றுக் கூடியபோது சபை அமர்வை கொண்டுசெல்ல வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 15 உறுப்பினர்கள் சபையில் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. சபை அமர்வில் பங்குபற்ற எவரும் வராததால் சபை இன்று காலை 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுகின்றது என்று பிரதிச் சபாநாயகர் அறிவித்தார். (எ-44)

## வற் வரி அதிகரிப்பு தவிர்க்க முடியாதது!

### ஜனாதிபதி கைவிரிப்பு

கொழும்பு, டிசெ. 11

வற்வரி அதிகரிப்பானது தவிர்க்கப்பட முடியாதது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்தியாவின் பெறுமதி சேர் வரி 18 வீதமாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டின் பொருளாதாரம் தற்போது வளர்ச்சிப் பாதையில் உள்ளது. எனவே முழுமையான வெற்றி இலக்கை அடையும் வரை இன்னும் சிறுகாலம் அனைவரும் அதற்குப் பங்களிப்புகளைச் செய்ய வேண்டும். வீழ்ச்சியடைந்த நிலையிலிருந்து நாட்டை முழு அளவில் மீட்பதே நம் அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## ஜப்பானிய நிதியமைச்சர் வருகின்றார்

கொழும்பு, டிசெ. 11

2024ஆம் ஆண்டின் முதல் இரு வாரங்களுக்குள் ஜப்பான் நிதி அமைச்சர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் ஜப்பான் பிரதான வகிபங்கைச் செலுத்தி வருகின்ற நிலையில். அதன் ஒரு கட்டமாகவே ஜப்பானின் நிதி அமைச்சர் இலங்கைக்கு வரவுள்ளார். இதன்போது அவருடன் இலகு ரயில் திட்டம் தொடர்பிலும் அரசாங்கம் நேரடியாக பேச்சை முன்னெடுக்கவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரையோரச் சுவீகரிப்பு எதிராகப் போராட்டம்

**யாழ்ப்பாணம், டிசெ.11**

**அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும், பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியைக் கைவிட வலியுறுத்தி நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு பொன்னாலைச் சந்தியில் நடத்தப்பட்டது. கடற்றொழிலாளர்களும், பிரதேச மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"எமது கடல் எமக்கு வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், கடலைச் சுவீகரித்து கடற்றொழிலாளர்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளாதே, எமது கடலை சுவீகரிக்க எவருக்கும் அனுமதியில்லை, ரணில் அரசே எமது கடலை சுவீகரித்து வரலாற்றுத் தவறைச் செய்யாதே, மேய்ச்சல் தரையையும் மயானங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக்கும் திட்டத்தை உடனே கைவிடவேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (எ-இ)

## மண்மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 11

காலி- கராப்பிட்டி பகுதியில் கட்டுமானத்தளமொன்றுக்கு அருகில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் அதில் சிக்குண்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிக்குண்ட நால்வர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார். ஏனையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-இ)



## மீனவர்கள் மாயம் தேடுதல் தீவிரம்

மட்டக்களப்பு, டிசெ.11

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள கல்மடு கடல் பிரதேசத்தில் பைவர் இயந்திர படகில் மீன்பிடிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்கு சென்ற இருவர் மூன்று தினங்களாகியும் வீடு திரும்பவில்லை. இயந்திர படகுடன் காணாமற்போன இரு மீனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளனர்.

கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தங்கவேல் தங்கத்துரை மற்றும் 56 வயதுடைய கந்தையா புண்ணியராசா ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளனர். (எ-இ)

## சீன அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கைத் தொழிலாளர் சிரமம்

கொழும்பு, டிசெ.11

நாட்டில் கடந்த சில வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் சீன அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு அதிகளவில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டங்கள் ஒருபுறம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்றபோதிலும், மறுபுறம் இதில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் இறுக்கமான விதிமுறைகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர்கள் சீனத் தொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது குறைந்த அளவிலான ஊதியத்தை பெறுகின்றனர் என்றும், குறைந்தளவான சலுகைகளை அனுபவிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

பணியிடங்களில் முதன்மை மொழியாக சீன மொழி பயன்படுத்தப்படுவதன் காரணமாக இலங்கைத் தொழிலாளர்கள் தகவல் தொடர்பாடலில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மக்களின் எதிர்ப்பையும் மீறி மதுபானசாலைக்கு அனுமதி

### சமூகஆர்வலர்கள் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 11

உடுப்பிட்டிப் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து அதற்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புகள் ஒன்றுகூடி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கலந்துரையாடின.

இதில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதென முடிவு எடுக்கப்பட்டது.

கலந்துரையாடலில் வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் மற்றும் உடுப்பிட்டியிலுள்ள சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (ச-100)

## புதினம் தெரியுமோ?

**வடக்கில உள்ள சில பள்ளிக்கூடங்களில இப்ப புதுசா ஒரு சிக்கல் வந்திருக்கு. கன பள்ளிக்கூடங்கள் இன்னமும் நிரந்தர அதிபர் இல்லாமல் தான் இயங்கிக் கொண்டிருக்கு. அதால கிட்டடியில எக்ஸாம் வைச்சு, வடக்கில முந்நூற்றுச் சொச்சம் பேருக்கு புதிசா அதிபர் நியமனம் குடுபட்டு, அவைக்கு இப்ப பயிற்சியளும் நடந்து கொண்டிருக்கு. அந்தப் பயிற்சி முடிய அவை புதுப் பள்ளிக்கூடங்களுக்குப் போகவேணும். ஆனால் அங்கதான் ஒரு சிக்கல் முளைச்சிருக்குது.**

**பள்ளிக்கூடத்தை சீரா நடத்தவேணுமெண்டால், அதிபர் கட்டாயம் தேவை. ஆனால் அதிபர் இல்லாத காலத்தில எப்பிடி பள்ளிக்கூடங்களைச் சரியா நடத்த ஏலும்? அதால அந்தந்தப் பள்ளிக்கூடத்தில இருக்கிற நிர்வாகத்திறமை இருக்கிறவையை 'கடமை நிறைவேற்று அதிபர்கள்' எண்ட வகையில நியமிச்சவை. இவைக்கு எக்ஸாம் ஒண்டும் வைக்கேலை. எல்லாரும் ஆசிரியர்களா இருந்தவை. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ மாதிரி நடக்காமல், ஒரு அதிபர் செய்யவேண்டியதுக்கு மேலால செய்த கடமை நிறைவேற்று அதிபர்மாரும் இருக்கினம். அதைமாதிரி, பள்ளிக்கூடங்களை சரியாக் கொண்டிழுக்க முடியாமல் சறுக்கின ஆக்களும் இருக்கத்தான் செய்யினம். இப்பிடியான நிலைமையில புதுசா எக்ஸாமில எடுபட்ட ஆக்கள் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு வந்தால், இப்ப நிறைவேற்று அதிபரா இருக்கிறவை திரும்ப படிப்பிக்கிற ஆசிரியரா போகவேணும். இவ்வளவு நாளும் அதிபரா இருந்திட்டு, திடீரெண்டு மறுபடியும் முதலில இருந்து எண்டமாதிரி, ஆசிரியரா போறதெண்டது மனரீதியா பாதிப்புத்தானே. அதால 'கடமை நிறைவேற்று அதிபர்கள்' இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு புதிசா அதிபர்மாரை நியமிக்க வேண்டாம்' எண்டு அவையள் மேல்மட்டங்களோட கதைக்கினமாம். இது அவையின்ர நியாயம்.**

**ஆனால் இதில இன்னொரு பக்க நியாயமும் இருக்கத்தான் செய்யுது. கடமை நிறைவேற்று அதிபர் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு புதுசா வந்தவையை அதிபராப் போடக்கூடாது எண்டால், அவையள் வெளிமாவட்டங்களுக்குத்தான் போகவேணும். 'இப்பிடி எக்ஸாம் எல்லாம் பாஸ் பண்ணி, தகுதியை நிரூபிச்சு வந்த எங்களுக்கு வெளிமாவட்டம். ஆனால் எக்ஸாம் எடுக்காமல், அதிபர் இல்லாத இடத்துக்கு போடுப்பட்டவை இங்கயே இருக்கப் போகினம். அப்பிடி அவைதான் தொடர்ந்தும் அந்தந்தப் பள்ளிக்கூடங்களில இருப்பினம் எண்டால், எதுக்கு எக்ஸாம் வைச்சு எங்களை எடுத்தவை?' எண்டு இவையள் கேக்கினம். ரண்டு பக்கமும் நியாயம் இருக்கு. அதால இந்த ரண்டு தரப்புக்கும் பாதிப்பு வராமல் ஒரு நல்லமுடிவை திணைக்களம் எடுக்கோணும். அப்பிடி எடுத்தாத்தான் எங்கட கல்வியின் எதிர்காலத்தை சரியாப் பாதுகாக்கமுடியும்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை நிகழ்வுகள்

வவுனியா, டிசெ.11

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் - 5 மாணவர்களின் கலைவிழா நிகழ்வுகள் ஆரம்பப் பிரிவு பிரதி அதிபர் த.ஸ்ரீகாந்தன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வித்தியாலய அதிபர் ஆ.லோகேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும் வவுனியா மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெயானந்தசிவம் தட்சாயினி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ரி- 75)

# விபத்தில் இருவர் காயம்

வவுனியா, டிசெ.11

வவுனியா, வேப்பங்குளத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, நெளுக்குளத்தில் இருந்து நகரை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், நகரில் இருந்து நெளுக்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் வேப்பங்குளம் பகுதியிலே நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (எ-110)

# நல்லை ஆதீன முதல்வர், ஆயருடன் உலகத்தமிழர் பேரவையினர் சந்திப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 11

இலங்கைக்கு வந்துள்ள உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். (ம-66)

# மின்தடை; இருவேறு விசாரணை

கொழும்பு, டிசெ. 11

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை தொடர்பில் மின்சார அமைச்சும், இலங்கை மின்சாரசபையும் இணைந்து இருவேறு விசாரணைகளை நடத்தவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-44)

# வரிக் கொள்கைகளால் நெருக்கடிகள் ஏற்படும்

## ஹர்ஷ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

மொத்த தேசிய உற்பத்தியை 15 சதவீதமாக அதிகரித்துக்கொள்ளாவிட்டால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியாது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சியில் மொத்த தேசிய உற்பத்தி 20 சதவீதமாக இருந்தது. அதைத் தொடர்ந்து ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எடுத்த தவறான தீர்மானங்களால் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தூரநோக்கமற்ற வகையில் எடுத்த தவறான தீர்மானத்தால் 600 பில்லியன் ரூபா முதல் 700 பில்லியன் ரூபா வரையான வரி வருமானம் இழக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. பொருளாதாரப் பாதிப்புக்கு எவர் காரணம் என்ற கேள்விக்கு உயர்நீதிமன்றம் உறுதியான பதிலளித்துள்ளது. நாட்டு மக்களும் தற்போது தெளிவடைந்துள்ளார்கள்.

விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்குவதாக குறிப்பிட்டுக்கொண்டு கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார். ஆனால், தற்போது வற் வரிக்குள் மண்வெட்டிகூட உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய வரிக் கொள்கையால் அடுத்த ஆண்டு சமூக கட்டமைப்பு மிக மோசமாக நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்- என்றார். (எ-இ)

# பருத்தித்துறைக் கடற்பரப்பில் 25 தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 11

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 25 பேர் இலங்கைக் கடற்படையால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாகபட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26,100)



# பாரதியார் பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 11

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரதியார் பிறந்த தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக செல்வா ஹோட்டல் உரிமையாளர் திரு.திருமதி செந்தூரன் துஷா கலந்துகொள்வார். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேஷம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப் பங்கள் நீங்கும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிர்ஷ்டவேடத்தில் நுழையும் ஆபத்து!

தமிழர்களிடத்தில் அண்மைக்காலமாக ஒரு பெருந் தொற்றுநோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. கொரோனாவைவிடவும், டெங்குத் தொற்றைவிடவும்; அந்த நோய் கொடியது. அதற்குப் பெயர்தான் மூடநம் பிக்கை. வேளாண்மையில் யதார்த்தத்துக்குப் புறம்பான, 'சாத்தியமற்ற அறுவடையைக்' கருத்திற் கொண்டு, பாரம்பரிய விதைகளை - கன்றுகளை புறக்கணிப்பதில் ஆரம்பித்த இந்த நோய், தற்போது வாஸ்து சாஸ்திரத்தின் பேராலும் 'பணத்தைப் பெருக்கும் அதிர்ஷ்டம்' என்ற மிதமிஞ்சிய பேராசையாலும் - வீட்டுக்கு வீடு வாசற்படியாக' ஒவ்வொரு வீட்டையும் ஆட்கொண்டி ருக்கின்றது. இந்தக் கண்மூடித்தனமான - பிற்போக் குத்தனமான- நம்பிக்கையால், தற்போது அரியணை ஏற்றப்பட்டிருக்கும் ஓர் அம்சம்தான் ஆகாயத்தாமரை. இதை, 'வலிதரக்கூடிய பேராபத்தான நிலை' என்று கோடுகாட்டியிருக்கின்றார் சூழலியல் ஆர்வலரும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர், மரபணு மாற்றப்பட்ட மூங்கில்களைக் கொள்வனவு செய்வதில் எம்மவர்கள் அதீத ஆர்வம் காட்டினார்கள். சிறியதும், அழகானதுமான சாடிகளில் வளர்க்கப்பட்டிருந்த மூங்கில்கள், எம்வீடுகளின் தலைவாசல்களில் தனியிடம் பிடித்துக்கொண்டன. வாஸ்து, பணம், அதிர்ஷ்டம் இவைதான் இந்தக் கண்மூடித்தனமான நடத்தைக்குச் சொல்லப்பட்ட காரணங்களாக அமைந்தன. இதைத் தொடர்ந்து இப்போது கருங்காலி மாலைகள், குபேரன் கன்றுகள், ஆகாயத்தாமரை என்பனவும் அதே பேர்களால் தமிழர்களிடத்தில் பரவலாக அறியப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கன்றுகள் எத்தகையவை, இந்தக் கொள்வனவுக்காகச் சொல்லப்படும் காரணங்களின் உண்மைத்தன்மை (வாஸ்து, பணம், அதிர்ஷ் டம்) என்ன? என்ற தெளிதலும், அதற்குரிய தேடுதல்களும் இருந்தால், தமிழர் சமூகம் இன்று இவ்வளவுதூரம் கண்மூடித்தனமான சமூகமாக சிந்தனைப் பிறழ்வான சமூகமாக மாறிக் கொண்டிருந்திருக்காது.

ஆகாயத்தாமரைகள் எனப்படுபவை, கட்டற்று வளர்ந்து காலப்போக்கில் ஒரு குளத்தையே ஆக்கிரமிக்கும் சக்தி மிக்கவை. அவற்றின் பூர்வீகமான தென்னமெரிக்கக் கண்டத்தில் இவை 'அதி அபாயகரமானவையாகவும்', சூழலியல் தீங்கை ஏற்படுத்துபவையாகவும் அறியப்படுகின்றன. அத்துடன் அந்தத் தேசங்களில் இவை 'பிசாசுச் செடிகளாக' வெறுக்கப்படவும் செய்கின்றன. யாழ்ப்பாணம் -ஆரியகுளத்தில் விரவியிருந்த இந்தப் படர்கொடிகள் பெரும் சிரமத்தின் பின்னால் அகற்றப்பட்டமை பலருக்கு நினைவிருக்கலாம். அவ்வாறான ஓர் ஆபத்தை - அச்சத்தைத்தான் இன்று எம்மவர்கள் வலிந்துசென்று வீடுகளுக்குள் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அதுவும் ஒரு கன்றுக்கு நூறு ரூபா முதல் இருநூறு ரூபாவரை வாரிவழங்கி அள்ளிச் செல்கின்றனர்.

ஆகாயத் தாமரைகள் வேர்மூலம் பரவக்கூடியவை. பிரமிட் முறை என்பார்களே, அதற்கொப்பான பரவல் இது. ஒன்றில் இருந்து இரண்டு, இரண்டில் இருந்து நான்கு, நான்கில் இருந்து பதினாறு என அவை பல்கிப்பெருகும் வேகம் கணிக்கமுடியாதது. இத்தனைக்கும் இந்தத் தாவரம் பரவுவதற்கு உயிர்ப்புடன் (அரும்புடன்) உள்ள சிறு வேர்த்தண்டுபோதும். வீடுகளில் இவற்றை வைத்துப் பராமரிக்கும்போது அவை தெரிந்தோ தெரியாமலோ ஒரு குளத்திலோ அல்லது இதர நீரேந்துப் பகுதியிலோ சங்கமிப்பின் அதன் ஆபத்தம்சத்தை அளந்து எழுத முடியாது. பெரும் நீராதாரமே இந்தத் தாவரத்தால் சவாலுக்குட்பட்டு இருப்பை இழக்கும்.

'முற்றத்தில் துளசிச்செடி: மூலையில் வேப்பமரம்' என்றிருந்த கலாசாரத்தின் உரித்தானவர்கள் நாம். எம் முன்னோர் எமக்காகப் பார்த்துப்பார்த்து உருவாக்கிச் சென்ற இந்த மரபுகளை அதே உயிர்ப்புடன் எதிர்காலச் சந்ததிக்குக் கடத்துவது எம்முன் உள்ள பெரும் கடமையாகும். அதையெல்லாம் விடுத்து, ஆகாயத்தாமரைகள், மரபு மாற்றப்பட்ட மூங்கில்கள், குபேரன் கன்றுகள் என ஓடிக்கொண்டிருப்பது எத்தனை பெரிய அபத்தம்.




# தவறியது அரசு!

## ஜே.வி.பி. தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.11**

**நாட்டின் உண்மையாள பொருளாதார நெருக்கடிகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தீர்வு காணவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை கடந்த இரண்டு வருடங்களாகத் தனது கடன்களை வழங்கவில்லை. நாங்கள் டொலரைச் செலவிடவில்லை. அதனாலேயே அரசாங்கத்தால் எரிபொருளையும் எரிவாயுவையும் இறக்குமதி செய்ய முடிந்துள்ளது. ஊழலும் பொருளாதார சமத்துவம் இன்மையும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம். நாட்டைஅபிவிருத்திசெய்து மக்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்கக்கூடிய பொருளாதாரத் திட்டமே அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# அரச ஊழியருக்கு முற்கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 11

அடுத்த வருடத்துக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட முற்பணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 4 ஆயிரம் ரூபா முற்பணமாக வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த முற்பணம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது. இதேவேளை- 2024ஆம் ஆண்டுக்குள் பணத்தை வசூலிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வாள்வெட்டில் மூவர் காயம்!

மன்னார், டிசெ. 11

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

தனிப்பட்ட குரோதமே இவ்வாறு வாள்வெட்டில் முடிந்துள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-213)

# சுற்றுலாவிகளுடன் 3 கப்பல்கள் வருகை

கொழும்பு, டிசெ. 11

4 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளுடன் 3 சொகுசு ரக சுற்றுலாப் பயணிகள் கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன. இந்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடவுள்ளன என்று சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# சிறு குற்றவாளிகளுக்கு புதிய நுட்பம் விரைவில்

கொழும்பு, டிசெ. 11

வறுமை அல்லது வேறுகாரணங்களால் சிறு குற்றங்களைச் செய்யும் நபர்களை சிறையில் அடைப்பதற்குப் பதிலாக, அவர்களின் உடலில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'சிப்' பொருத்தி, அவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பிணை வழங்கும் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## நாளை

**12.12.2023**

**செவ்வாய்க்கிழமை**

**கார்த்திகை - 26**

சுபநேரம் : 10.50 - 12.20

ராகுகாலம் : 03.20 - 04.50

## நாளொரு நல்வார்த்தை

**வார்த்தைகள் பணம் போன்றவை; உண்மையான பயன்பாட்டில் இல்லாத பட்சத்தில், மிகவும் பயனற்றவை.**

**– சாமுவேல் பட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மக்களுக்கு ஜே.வி.பி. அழைப்பு



கொழும்பு, டிசெ.11

**எங்களுடன் இணையுங்கள், நாங்கள் உங்கள் தேவைகளைப்பூர்த்தி செய்வோம். ஊழல்மிகுந்த ஆளும் குழுவைத் தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்துகொள்ளவேண்டும் - இவ்வாறு வடக்கு மக்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அழைப்பு விடுத்துள்ளது.**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எங்களின் நெருங்கிய அயல்நாடான இந்தியா மிகவும் வலுவான அரசியல் பொருளாதார மையமாக மாறியுள்ளமை எமக்குத் தெரியும். பொருளாதார அரசியல் முடிவுகளை எடுக்கும்போது அது இந்தியாவை எப்படிப் பாதிக்கும் என்பது தொடர்பாக நாம் அவதானம் செலுத்துவோம்.

இரண்டு சக்திவாய்ந்த நாடுகள் மத்தியில் பூகோள அரசியலில் போட்டி காணப்படுகின்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இல்லை.

இந்த நாட்டில் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். தமிழர்கள், முஸ்லிம்கள் தொடர்பில் அவர்களது மொழி, கலாசார விடயங்கள் மற்றும் ஆட்சி முறையில் பங்கெடுத்தல் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு நாங்கள் தீர்வைக் காணவேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மீளப்பெறப்படும் பாதுகாப்புப் படை

கொழும்பு, டிசெ.11

மிஹிந்தலை புனித பூமியில் சேவையாற்ற பாதுகாப்புத் தரப்பினர் விரும்பவில்லை என்பதால் அவர்கள் அங்கிருந்து மீள அழைக்கப்படுவர் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை புனித பூமியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 251 பாதுகாப்புத் தரப்பினரையும் மீளப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (எ-இ)

## தமிழ், சிங்களம் ஒன்றாக வராது

கொழும்பு, டிசெ.11

தமிழையும், சிங்களத்தையும் ஒரே நேரத்தில் கற்க முயன்று தோல்வியடைந்துள்ளேன் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் தமிழையும், சிங்களத்தையும் கற்க முயன்றேன். நான் இரண்டையும் ஒரேநேரத்தில் கற்க முயன்றேன், தவறுசெய்தேன். இரண்டு மொழிகளை ஒரேநேரத்தில் கற்க முயல்வது சவாலான விடயம். எனது கடினமான வேலைப்பளு காரணமாக இரண்டு மொழிகளையும் கற்கமுடியவில்லை. என்னால் அடிக்கடி பயன்படுத்தக் கூடிய சில சொற்களை கற்க முயல்கின்றேன். எனக்குத் தெரிந்த ஒரு சில சொற்களைப் பேசினாலும் மக்கள் உடனடியாக என்னை நோக்கி வருவதை அவதானித்துள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வடக்கில் மழை

கொழும்பு, டிசெ. 11

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சில பகுதிகளில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 1 மணிக்குப் பிறகு பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலைவேளையில் பனிமூட்டமான வானிலை நிலவும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## "நாளை நலம்தானே நம்பு நம்பு மனமே"



கொழும்பு, டிசெ. 11

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச்சபை கூட்டம் நாளை இடம்பெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தில் இலங்கை தொடர்பில் மங்கல கரமான செய்தியை நாணய நிதியம் அறிவிக்கவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

"தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாதத்தில் மொத்தமாக 780 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்குக் கிடைக்கப்பெறவுள்ளது. சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கைக்குக் கடனை மீள் செலுத்த நிவாரண காலத்தை வழங்கவும் இணங்கியுள்ளனர்.

கடன் வட்டியில் குறிப்பிட்ட தொகையைத் தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர்.

தேசிய கடன் மறுசீரமைப்புகளின் பின்னர், சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பரிஸ் கழகம் உட்பட தனியார் கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு ஒத்துழைக்கும் வகையில் தீர்மானங்களை எடுத்துள்ளனர்"- என்றார். (ம)

## கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'ஸ்ர்வபாபஹரதீர்த்தம்' தீர்த்த மண்டபத்தில் கலசம் வைக்கும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் சதுர்த்தி தினத்தில் காலை 8 மணிக்கு தீர்த்த திருக்கேணி மற்றும் மண்டபப் பிரதிஷ்டை என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி கணபதி ஹோமம் காலை 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று விநாயகர் சஷ்டி பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மறுநாள் 19ஆம் திகதி விநாயகர் திருவீதியுலாவும் புதிய தீர்த்தக்கேணியில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

## மின்தடையால் கடும் தர்க்கம்

கொழும்பு, டிசெ.11

நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை காரணமாக நேற்று நாடாளுமன்றத்தில் ஆளும் எதிர்க்கட்சிகளிடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, மின்சக்தி அமைச்சு உரிய காலத்தில் பணிகளைச் செய்ய முடியாததன் காரணமாகவே இவ்வாறு மின் துண்டிப்புகள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டினார்.

அப்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா, இயற்கையான ஏற்பட்ட கோளாறுகளையும் அரசாங்கத்தின் மீது சுமத்துகின்றனர். கீழ்த்தரமான அரசியலைச் செய்ய வேண்டாம் - என்றார். (எ-இ)

## வரிகளின் அதிகரிப்புக்கு ஐ.எம்.எப். காரணமல்ல

*ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு*



கொழும்பு, டிசெ.11

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய வற் வரி அதிகரிக்கப்படுகின்றது என்று அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

"பொதுப் போக்குவரத்துச் சேவை, கல்வி, சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய உணவு பொருள்கள் மீது வரி விதிக்கவேண்டாம் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

திரிபோஷா, முட்டை உட்பட உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்று நாணய நிதியம் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை.

புதிய வரிக் கொள்கையால் சமூக கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிப்படையும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## தோட்டத்தொழிலாளிகளுக்கு தினக்கூலி 3,000 வழங்குக

*மனோ எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, டிசெ. 11

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலியாக 3 ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலியாக ஆயிரத்து 800 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று கம்பனிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ள நிலையிலேயே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரத்து 800 ரூபா என்ற தொகையை எவ்வாறு நிர்ணயம் செய்தார்கள் என்று தெரியவில்லை. இந்தத்தொகை போதாது 3 ஆயிரம் ரூபா கிடைக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**பொன்னுத்துரை மகேசலிங்கம்**

தோற்றம் 28.04.1939 — மறைவு 06.12.2023

எமது ஆலயத்தின் முன்னாள் பரிபாலன சபை செயலாளராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் ஆலய மணி மண்டப பொறுப்பாளராகவும் இருந்து சிறப்பான முறையில் அமரத்துவமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மனை பிரார்த்திக்கின்றோம்.

(CR 39045) (3/6)

பிரிவால் துயருறும்
கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்[illegible] தேவஸ்தான
பரிபாலன சபையினர் மற்றும் இ[illegible]ஞர்கழகம்


# வீடமைப்பு அமைச்சின் நிலுவை விரைவில் வழங்க முடிவு

**அமைச்சர் தெரிவிப்பு**

கொழும்பு, டிசெ.11

கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு செலுத்த முடியாத ஆயிரத்து 989.75 மில்லியன் ரூபா பணம் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்தத் தொகையை செலுத்துவதன் மூலம் கொவிட் தொற்று காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செலுத்தாமல் இருந்த அனைத்து கட்டணங்களும் முழுமையாகச் செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆயிரத்து 112.57 மில்லியன் ரூபா பணத்தையும் இந்த வருட இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




**திருமதி அமிர்தவேணி விமலன்**

(தர இணைப்பாளர்)

(SLTS -1)

(B.A, PGDE, M.A - அரசியல் விஞ்ஞானம்)

**சேவைக்காலம்**

- யா / பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை 1990.03.26 - 1994.12.31
- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் 1995.01.01 - 2001.02.23
- யா/ வேலணை சைப்பிரகாச வித்தியாலயம் 2001.02.24 - 2003.12.31
- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் 2004.01.01 - 2013.12.31
- யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை 2014.01.01 - 2023.12.11

இந்து ஆரம்ப அன்னையின் மழலைகளுக்கு
அறிவூட்டிய அன்பான ஆசானே!
அகவை அறுபதைக் கடந்து மணிவிழாக்
காணும் எங்கள் விழா நாயகியை வாழ்த்துகின்றோம்.

**வாழ்க நீங்கள் பல்லாண்டு!**

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

(cs.27339) (N.I)


## இலங்கை மேம்பாடு

கொழும்பு, டிசெ.11

2024 வரவு - செலவுத் திட்டத்துடன் பல துணை ஆவணங்கள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து, இலங்கையின் தற்போதைய சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் வெளிப்படைத்தன்மை நவம்பர் மாதத்தில் மேம்பட்டுள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.

முன்பு 'அறியப்பாதவை' என வகைப்படுத்தப்பட்ட ஆறு உறுதிமொழிகளின் செயற்றிறன் தொடர்பான தகவல்களின் துணை ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் ஐந்து உறுதிமொழிகள் தற்போது 'நிறைவேற்றப்பட்டது' என்றும் ஒன்று - வரி வருவாய் இலக்கு - 'நிறைவேற்றப்படவில்லை' என்றும் மறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் இறுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட 73 உறுதிமொழிகளில் 12 'நிறைவேற்றப்படவில்லை', 15 'அறியப்பாதவை' என்றும், மேலும் 46 'நிறைவேற்றப்பட்டவை' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நவம்பர் இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதிமொழிகளில் 63 வீதம் நிறைவேற்றப்ப ட்டுள்ளன. ஆயினும் இலங்கையின் ஒட்டுமொத்த செயற்றிறன் ஈர்க்கக்கூடியதைவிட குறைவாகவே உள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது. (எ-இ)

## கடற்படை கப்பல் மோதி இந்திய மீனவர் காயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 11

கச்சத்தீவு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இலங்கைக் கடற்படையின் ரோந்து கப்பல் மோதியதில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் காயமடைந்தனர் என்று இராமேஸ்வர மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அமைதியான முறையில் மீன்பிடித்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மிரட்டும் வகையில் வெளியேற்றியதாகவும் வேண்டுமென்றே படகை மோதி விபத்துக்குள்ளாக்கியதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-100)


## நினைவுகள் நீங்காது நிழலாடுகின்றன

1ஆம் ஆண்டு நினைவு தினம் — 2ஆம் ஆண்டு நினைவு தினம்





மண்ணில் 09.09.1948 — விண்ணில் 11.12.2022

**திரு. கனகசுந்தரம் அருட்செல்வம்**

(ஓய்வுபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி, அலுவலக உத்தியோகத்தர்)

மண்ணில் 16.07.1955 — விண்ணில் 02.01.2022

**திருமதி ரத்தினவதனா அருட்செல்வம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். பரியோவன் கல்லூரி)

"இந்த தேவன் என்றென்றைக்குமுள்ளசதா காலங்களிலும் நம்முடைய தேவன் ; மரண பரியந்தம் நம்மை நடத்துவார்."

எம் குடும்பத்தின் மூத்த மருமகனின் முதலாம் ஆண்டு நினைவு நாளினையும் மூத்த மகளின் இரண்டாம் ஆண்டு நினைவுதினமும் இந்நாளில் நினைவுகள் நீங்காது நிழலாடுகின்றன.

ஆத்மாகள் கர்த்தருக்குள் இரசிப்பதாகுக.

"இரத்தினவாசம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்



## க.பொ.த. உயர்தரம் - 2025 இற்கான அனுமதி

எமது உடுவில் மகளிர் கல்லூரியின்
க.பொ.த உயர்தரம் - 2025 இற்கான
**புதிய மாணவர் அனுமதி**
தமிழ், ஆங்கில மொழிமூலமான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்.

அனுமதிகளை இன்றிலிருந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி - 22.12.2023

அதிபர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



கடந்த 12.11.2023 அன்று சிவபதம் அடைந்த
எமது பழைய மாணவர்களின் தாயாரான

அமரர் **மாணிக்கவாசகர் பரமேஸ்வரி**

தோற்றம் 08.08.1957 — மறைவு 12.11.2023

அவர்களின் 31ஆம் நாள்
நினைவு நாளையொட்டி
அவர்களின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 01 - 1969



மறைவு
09 - 12 - 2023

## வேலுப்பிள்ளை புஸ்பராசா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை புஸ்பராசா அவர்கள் நேற்று முன்தினம் (09.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான வேலுப்பிள்ளை, மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான சின்னையா - தையல்நாயகி தம்பதிகளின் மருமகனும், சிவநந்தினியின் அன்புக் கணவரும், ரதீபா, பவிசன், சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிர்காமராசா, கனகராசா, ஶ்ரீஸ்கந்தராசா, தயாநிதி, ராகினி, றஜனி, குகராசா (வாசன்), டர்மராஜா, காலஞ் சென்ற கஜனி மற்றும் ராஜ்பவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜலதா, சுமனா, ராஜகலா, சுரேந்திரன், பிரபாகரன், ஶ்ரீசண்முகராசா, குகாஜினி, சிவதர்மினி, சிவச்செல்வன், சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெல்லிப்பளை**
**077 765 68 73, 076 726 5434**

(CR 41185)(K-1)

தகவல்:
**குடும்பத்தினர்**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
08 . 09 . 1953



மறைவு
11 . 11 . 2023

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவரும்
கடந்த (11.11.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னக்குட்டி தேவராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.12.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

(cs53141) (N.1)

குடும்பத்தினர்

PLEASE ACCEPT OUR CONDOLENCES

*We Share In Your Sorrow*

## Sivamugunthini Anantharasa

Accountant- Deco Needs (PVT) Ltd
UKAY Accounting Services Ltd
Lotus Care Group - UK

*What World has lost, Heaven found.*
*Know that we are always*
*here to support you through this difficult time.*
*Love from Team Members.*



29 December 1996 - 9 December 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தால் டெங்கு விழிப்புணர்வு கருத்தமர்வு கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் கடந்த டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான காலப்பகுதியில் டெங்கு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிகழ்த்தினார். (ரி-9)

## இளைஞர் மாநாடு



வவுனியா, டிசெ.11

வடக்கு இளைஞர் முன்னெடுப்பு அமைப்பால் 2023ஆம் ஆண்டுக்கான இளைஞர் மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

போர் முடிவடைந்து ஒரு தசாப்தம் நிறைவடைந்த நிலையில் அரசியல் தேவைகளுக்காக இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி முரண்பாட்டை ஊக்குவிப்பதற்கான பல சாதகமான தன்மைகள் சமூகத்தில் காணப்படுகிறது. இலங்கை மக்கள் நிலையான சமாதானத்தை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் அநீதி மற்றும் நியாயமற்ற தன்மைக்கு உட்பட்டவர்களுக்கு உண்மையைக் கண்டறிய ஆவன செய்வதுடன் அவர்களது வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் தொடர்பான விடயங்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. மாநாட்டில் அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளினுடைய பிரதிநிதிகள், மற்றும் இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டதுடன் கருத்துகளையும் முன்வைத்தனர். (எ-110)



## சர்வதேச போட்டியில் மூன்றாம் இடம்

மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேசரீதியிலான மனக்கணிதப் போட்டியில் மன்னார் மாணவி ரியானா மூன்றாம் இடத்தைப் பெற்றார். யு.சி.எம்.எஸ். என்ற நிறுவனத்தால் இலங்கையிலிருந்து 62 மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதில் மன்னார் தோட்டவெளிப் பாடசாலையில் இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ரியானாவே மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (ரி-60)


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 11 . 1947



மறைவு 09 . 12 . 2023

### இராமச்சந்திரன் புஸ்பராணி

வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 05, பாரதிவீதி, கூமாங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் புஸ்பராணி அவர்கள் கடந்த (09.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற இராமச்சந்திரனின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்மகுணசிங்கம், திலகவதி, யோகராணி, காலஞ்சென்ற ஜெயராணி, உதயராணி (இந்தியா), நித்தியகல்யாணி (ஜேர்மன்), நவசோதி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி (இலண்டன்), காலஞ்சென்ற இராசநாயகம், செல்வநாயம், காலஞ்சென்ற சதானந்தலட்சுமி, காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், செல்வராசா, மற்றும் செல்வநாயகம் (ஜேர்மனி), சொக்கலிங்கம் (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 5, பாரதிவீதி,
கூமாங்குளம், வவுனியா.

077 188 8316
076 943 0288

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 53142) (K - 1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 09 . 1953



மறைவு 09 . 12 . 2023

### இராசரத்தினம் சிவதாசன் (திருச்செல்வம்)

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிவதாசன் அவர்கள் 09.12.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (வந்தனம்) சௌந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தெய்வரத்தினம் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், திரவியரத்தினம் (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், சிவகரன் (கொலண்ட்), சிவகணேஸ் (ஜேர்மனி), சிவறஞ்சனி (இத்தாலி), தேனு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மிலா, சுபாஜினி, நிசாந்தன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பராசக்தி (இலங்கை), பொன்மலர் (கணேஸ்-கனடா), ஞானமலர் (குஞ்சா-கனடா), பாசமலர் (இலங்கை), ராசமலர் (திரவியம்-கனடா), றஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி, தங்கமலை, பாலசுப்ரமணியம் (சுந்தரி), பிரபாகரன், குகாநந்தன் (குகன்), சியாமளா (கண்ணா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சயன், அச்சுதன், அஸ்வின், சஸ்மிதா, சஸ்வின், கிசானிக்கா, அயுஷ்மன், கியாரா, அத்தினா, நிவினா, அனேல்லா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தாவடி தெற்கு, பாடசாலை வீதி, நெல்லூர்ப்பதி பிள்ளையார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கணேஸ் மகன் - 94741322749
சங்கர் மகன் - 31686060605
பிரபா மைத்துனர் - 94776034658

றஞ்சன் சகோதரன் - 41786549617
குஞ்சா - சகோதரி - 16473935133

(CS 27350) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரோபோ தொழில்நுட்பம்

## கிளி. மத்திய கல்லூரி மாணவன் சாதனை!

கிளிநொச்சி, டிசெ. 11
தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட ரோபோ தொழில்நுட்பப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை சேர்ந்த உயர்தர தொழில்நுட்பப் பிரிவு மாணவன் கிருபாகரன் பிரணவன் தேசியத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் முன்னதாக நடத்தப்பட்ட மாகாண மற்றும் வலய மட்டத்தில் முதலாம் இடத்தை தனதாக்கியவர்.

இவரது கண்டுபிடிப்பான 'Relief Attempt Monitoring System' கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பொருத்தப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (ச-75)



தேசிய மட்ட புத்தாக்கப் போட்டியில் பங்கேற்ற வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி பி. பிரதிக்சா (தரம் -7) 'தொழில் சார் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஆய்வுகள்' எனும் விடயப்பொருளில் 'சிறப்பு பெண் விருது' பெற்றுக்கொண்டார். (ச-இ)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கல்லூரி ஒளிவிழா நிகழ்வுகள் பாடசாலை முதல்வர் தலைமையில் சிறப்புற நடைபெற்றன. (ச-75)






## மாகாணமட்டத்தில் வாகினி முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 11
உடுவில் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட 'மனிதாபிமான' பெண்களுக்கான சுயதொழில் முனைவோர் போட்டியில் உடுவிலைச் சேர்ந்த திருமதி வாகினி பிரான்சிஸ் வடக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்று சிறந்த சுயதொழிலாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ச-66)



## ஆன்மீகப் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 11
தேசிய முதியோர் செயலகத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி, இயக்கச்சி மற்றும் இத்தாவில் பகுதியைச் சேர்ந்த முதியோர் மன்னார் மாவட்டத்துக்கு ஆன்மீகப் பயணத்தை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டனர்.

இதன்போது திருக்கேதீஸ்வரம், மடு உள்ளிட்ட புனித தலங்களை அவர்கள் தரிசித்தனர். (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் மோதல்; ஆறு பேர் காயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 11

இலங்கை கடல் எல்லைக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களைக் கைது செய்யும் போது ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலும் தலா மூவர் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இரண்டு படகுகளில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 25 தமிழக மீனவர்களை நேற்று அதிகாலை கடற்படையினர் கைது செய்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது நடவடிக்கையின் போது தமிழக மீனவர்களால் தாக்கப்பட்டதில் இலங்கைக் கடற்படையினர் மூவர் காயமடைந்து யாழ்.போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை - குறித்த கைதின்போது இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு மூன்று தமிழக மீனவர்கள் காயமடைந்தமை தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட 25 மீனவர்களில், இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த மூவருக்கு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதிக்குமாறு மீனவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார். இதையடுத்து மூன்று மீனவர்களது காயங்களைப் பார்வையிட்ட பதில் நீதிவான் அவர்களை யாழ். போதனா மருத்துவமனையில் முற்படுத்தி சிகிச்சை வழங்கவும், யாழ்.போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தி அறிக்கை பெற்றுச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டுள்ளார். (ஓ.100)

(தொடர்புடைய செய்தி - பக்:4)

## நாடாளுமன்றத்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திய பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவார் என்றே பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர்.

தற்போதைய சூழலில் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் எந்தவொரு தரப்பும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளமுடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை ஜனாதிபதி என்ற பதவியை வைத்துக் கொண்டு தனது ஐக்கிய தேசியக் கட்சி ஓரளவு ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதன் ஊடாக எந்தவொரு தரப்பும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாது என்பதால், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையைத் தனது தேவைக்கு ஏற்றவாறு நியமித்து புதிய நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையான - உறுதியான ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது வெற்றி வாய்ப்புக்கான அதிக சந்தர்ப்பமாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில தரப்புகள் தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஓ-5)

## இடைக்காலச்...

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்;

நாடாளுமன்றச் சட்டத்தினூடாக உருவாக்கப்படவுள்ள உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான உத்தேச சுயாதீன ஆணைக்குழுவின், இடைக்காலச் செயலகத்தின் அங்கத்தவர்கள், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை கொழும்பிலுள்ள இல்லத்தில் கடந்த 9ஆம் திகதி மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

உத்தேச சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி அசங்க குணவன்ச, இடைக்காலச் செயலகத்தின் கொள்கைப் பிரிவுத் தலைவர் கலாநிதி தங்கராஜா, இடைக்காலச் செயலகத்தின் சட்டப்பிரிவு அலுவலர் நிசாந்தினி ரதனம், நீதி அமைச்சரின் சட்ட ஆலோசகர் அஸ்வினி அப்பங்கம, உள்ளிட்ட குழுவினர் ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவுக்குத் தேவையான சட்டம் மற்றும் கொள்கை கட்டமைப்பு, செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தின் பணிகளை வட மாகாணத்தில் முன்னெடுப்பது தொடர்பில் ஆளுநருடன் அவர்கள் ஆராய்ந்தனர்.

மதத்தலைவர்கள், அரச பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை ஆணைக்குழுவுக்கான இடைக்காலச் செயலகத்தினர் நாளை வரை சந்தித்து நல்லிணக்கப் பொறிமுறைக்கான கருத்துக்களைக் கேட்டறிதல், ஆணைக்குழு தொடர்பான விளக்கங்களை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர் - என்றுள்ளது. (அ-ஓ-26)

## ரெலோ...

சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடாமல் அவர்களது அனுமதியைப் பெறாமல், தன்னிச்சையான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது வேதனைக்குரியது. புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டிக்கொண்டு எமது ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளையும் தவறாக வழி நடத்தி செல்லும் இந்த நடவடிக்கையை நாங்கள் நிராகரிக்கிறோம்.

அவர்கள் முன்வைத்திருக்கும் பிரகடனத்திலே மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வதற்கே புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று கூறியிருப்பது வேடிக்கையானது. அது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல் இலக்கையே புரிந்து கொள்ளாதவர்கள் இவர்கள் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஒருசிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்காக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மலினப்படுத்தும் நடவடிக்கைகளில் புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் ஈடுபடவேண்டாம் என்று நாங்கள் கோரிக்கை வைப்பதோடு, கண்டனத்தையும் பதிவு செய்து கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ஓ-இ)

## நட்புத்...

தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது இலங்கை - இந்திய நட்புறவை மேம்படுத்த கோபால் பாக்லே வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இந்தியத் தூதுவர் பாக்லே இலங்கையில் தனது பணிக்காலத்தை நிறைவு செய்து வெளியேறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

## மாவீரர்...

கடந்த 27 ஆம் திகதி கிரான் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நினைவேந்தலில் பங்கேற்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று பங்கேற்றுவிட்டு இவர்கள் வீடு திரும்பியுள்ளனர். அந்த மோட்டார் சைக்கிள் இலக்கங்களை வைத்து, நால்வரின் பெயர் விவரங்களைப் பொலிஸார் பெற்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை வாழைச்சேனை பொலிஸார், ஊடகவியலாளர் பிரதீபன் உட்பட 4 பேருக்கு கையடக்கத் தொலைபேசி ஊடாக மோட்டார் சைக்கிள் பிரச்சினை தொடர்பாகப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று மோட்டார் சைக்கிள் பிரச்சினை தொடர்பாக அழைக்கப்பட்டமை தொடர்பில் விசாரித்தபோதே, மாவீரர் நாளில் பங்கேற்றமை தொடர்பாக வாக்குமூலம் வழங்கவே அவர்கள் அழைக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

மாவீரர் நினைவேந்தல் முடிவுற்று இரு வாரங்கள் சென்ற பின்பும் தொடர்ச்சியாக நினைவேந்தலில் பங்கேற்றியவர்களை பொலிஸார் அச்சுறுத்துவதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (அ-ஓ-இ)

## ஆர்ப்பாட்டம்...

ஆகிய விடயங்களை முன்னிறுத்தியும் எமது எதிர்கால இளைஞர்களுக்காக என்ற தலைப்பில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மேலும் தமது உரிமைகளை வென்றெடுக்க வீதியில் இறங்கி சுதந்திரமான எதிர்காலத்துக்காக வாழும் உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

## 2 ஆம் கட்டம்...

இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முதல் கட்டம் பற்றிய விரிவான மீளாய்வை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பயனாளிகளின் எண்ணிக்கையை 20 இலட்சமாக உயர்த்தி பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும், அதற்காக 2024 ஆம் ஆண்டுக்கு 205 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஓ-இ)

## எல்லா...

தெரிவித்தார். அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும், பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன உயிரிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ள நிலையில் அதனைக் கைவிடுமாறு வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை பொன்னாலைச் சந்தியில் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். அதில் பங்கேற்று ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குக் கரையோரப் பகுதிகள் அனைத்திலும் நூறு வீதம் தமிழ்மக்களின் குடியிருப்புக்களே அமைந்துள்ளன. தற்போது வன உயிரிகள் திணைக்களத்தின் ஒவ்வொரு அசைவும் கரையோரங்களை எவ்வாறு சுவீகரிப்பதாகவே அமைந்துள்ளது. காணிச் சொந்தக்காரரைக் கொழும்பில் வைத்து மிரட்டித்தான் பொன்னாலை திருவடி நிலையில் காணியைக் கடற்படைக்குச் சுவீகரித்தார்கள். தற்போது கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸார் காணிகளை நேரடியாகச் சுவீகரிப்பதில் பல்வேறு தடங்கல்கள் காணப்படுகின்றன. அதனால் வன உயிரிகள் திணைக்களத்தின் மூலமாக காணிச் சுவீகரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வன உயிரிகள் திணைக்களத்தினர் இங்குள்ள கடற்கரையோரப் பகுதிகளைப் பார்வையிடுவதற்கும், பரிசோதிப்பதற்கும் கூட நாங்கள் அனுமதிக்கக்கூடாது. மக்கள் சாதாரணமாக, நிம்மதியாக வாழும் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களை எதுவும் செய்யலாம் என்ற நிலைப்பாட்டில் சிங்கள அரசியல்வாதிகளும், ஜனாதிபதியும் உள்ளனர். ஆனாலும், ஜனாதிபதி இதுதொடர்பில் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. இவற்றுக்கு மத்தியில் இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுமா?

கடந்த வாரம் 30 இளைஞர்கள் தென்பகுதியிலிருந்து வடக்குக்கு வருகை தந்திருந்தார்கள். இதுவரை காலமும் என்ன நடந்தது? என்பது தொடர்பில் தகவல்கள் திரட்டி வழங்கியிருந்ததுடன் இவற்றுக்கு மத்தியில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும்? எனவும் அவர்களிடம் கேள்வியை முடிவியிருந்தேன். தமிழ்மக்கள் முதலில் சிங்களவர்களுடன் பேசுவதா? சிங்களவர்கள் தமிழர்களுடன் பேச வேண்டுமா? என்று நோக்கினால் இரண்டும் சமநேரத்தில் நடைபெற வேண்டுமென அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருந்தேன் - என்றார். (அ-ஓ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானிக்கு மன்னாரை தாரைவார்க்க முடியாது

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.11**

**மன்னாரில் அதானி நிறுவனம் கொண்டுவரவுள்ள திட்டங்கள் தொடர்பில் அறிகின்றோம். சர்வதேச ரீதியில் கீர்த்திபெற்ற மன்னார் தீவை முற்றுமுழுதாக சுற்றுலாத்துறைக்கு தாரைவார்க்க இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

"இந்தத் திட்டங்களுக்காக அங்குள்ள தனியார் காணிகளை பலாத்காரமாக, குறைந்த விலைக்கு அரசாங்கம் வாங்கி, அதானி நிறுவனத்துக்கு இன்னுமொரு விலைக்கு கொடுக்கின்றது. இது நியாயமா? எனக் கேட்கின்றேன். தனியார் நிறுவனங் களுக்கு பொதுமக்களின் காணிகளை விற்காதீர்கள். இந்த நிலை தொடர்ந்தால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலையே ஏற்படும்" என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

(எ-இ)

## பாதுகாப்பு புலம்பெயர்வு மக்களுக்கு தெளிவூட்டல்

*கொழும்பு, டிசெ. 11*

பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்கள் பங்கேற்று விளக்கமளித்தனர். தற்போது வெளிநாட்டில் நிலவும் தொழில் வெற்றிடங்கள் மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

(ச-66)

**மோட்டார் வாகனம் விற்பனைக்கு**

2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட TVS Wego Bgo xxxx இலக்கமுடைய தனிப்பட்ட பாவனையில் உள்ள மோட்டார் வாகனம் விற்பனைகுண்டு. (1st Owner)

**070 376 5303**

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில் புடைவைக் கடையொன்றிற்கு வேலையாள்கள் தேவை. (ஆண். பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்) (சுன்னாகத்தை அண்டிய பிரதேசத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது) அனுபவமுள்ள மற்றும் பழக விரும்புவோரும் ஏற்றுக்கொள்ளப்படும். (cs 27334(2.6)

**077 456 9678**

## இராணுவ பேருந்துடன் மோதி தாயும் மகளும் காயம்

*முல்லைத்தீவு, டிசெ. 11*

முல்லைத்தீவு, சிலாவத்தை வீதியில் நேற்று இரவு இராணுவத்தினரின் பேருந்துடன் மோதிய விபத்தில் சிலாவத்தையைச் சேர்ந்த தாயும் மகளும் படுகாயமடைந்துள்ளார்கள்.

மழை பெய்து கொண்டிருக்கையில் சிலாவத்தையிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளம் தாயும் சிறுமியும் வீதியில் நின்ற மாட்டுடன் மோதி வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவப் பேருந்துக்குள் சிக்கியுள்ளனர்.

(ஒ-19)

## ஆக்கத்திறன் போட்டிகள்

முல்லைத்தீவு, டிசெ.11

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ரி-75)

## பேருந்து - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

மன்னார், டிசெ. 11

பேசாலையில் இ.போ.ச. பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் கடும் காயங்களுடன் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; மன்னாரிலிருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற பேருந்து, தலைமன்னாரிலிருந்து பேசாலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-213)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Best Wishes



Congratulations

ஐக்கிய மனித உரிமைகள் பேரவையின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளராக

**திரு.செபஸ்ரியன் ஜோண்பப்ரிஸ்** அவர்கள்

**(தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிபெயர்ப்பாளர்)**

**பதவியேற்றுள்ளமையை**

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:** K.யேசுராஜன்
நிர்வாக இயக்குநர்
ஆங்கில கல்வி நிறுவனம் (ELG)

## தமிழக மீனவரை விடுவிக்க அரசியல்வாதிகள் அழுத்தம்

சென்னை, டிசெ. 11

இலங்கை சிறையில் வாடும் அனைத்து மீனவர்களையும் மீட்கவேண்டும் என பா.ம.க. கட்சியைச் சேர்ந்த மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'நாகை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மற்றும் புதுவை காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 25 மீனவர்களைக் கைது செய்துள்ள இலங்கை கடற்படை அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. தனுஷ்கோடி அருகே இராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகு மீது தங்களின் படகை மோதி சேதப்படுத்தி உள்ளது சிங்களக் கடற்படை. இந்தத்தாக்குதலில் சேதமடைந்த படகில் இருந்த 5 மீனவர்கள் உயிர் பிழைத்து உள்ளனர். சிங்களக் கடற்படையினரின் இத்தகைய செயல்கள் கண்டிக்கத்தக்கவை. புயல் காரணமாக கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கடலுக்குச் செல்லாத மீனவர்கள் கடந்த சில நாள்களாகத்தான் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அதற்குள்ளாகவே அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்போது கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்துப் படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என அவர் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 24 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **077 468 3354**
**076 755 8606**

(CS 27307) A-1

**செய்தி** : 021 493 0000 - **விளம்பரம்** : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org